உ

# நாவலர்

# சமயப் பணி

★

சி. சிவரத்தினம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

உ

# நாவலர் சமயப் பணி

★

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின்
83-வது குருபூசைத் தின
ஞாபக வெளியீடு

★

சி. சிவரத்தினம்.

# முகவுரை

சான்றோர் பலரை ஈன்றது ஈழநாடு. இதன் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்து நல்லூர் சரித்திரப் புகழ் பெற்றுள்ளது. இங்கே தோன்றிய நாவலர்பெருமான் தமிழுக்கும் சைவசமயத்துக்கும் அழியாப் புகழைப் பெற்றுக் கொடுத்தார். மேல்நாட்டவர் ஆதிக்கத்தால் நம் நாடு இழிநிலையடைந்திருந்த காலத்தில் சைவத் தமிழ் உலகுக்கு கலங்கரை விளக்காகத் துலங்கினார்.

தமிழையும் சைவசமயத்தையும் வளர்க்க வேண்டுமென்ற பேராவலினால் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அவற்றுக்காக அர்ப்பணித்தார்; ஓயாது பணி செய்தார்; அழியாப் புகழ் ஈட்டினார்; சைவத் தமிழ் நூல்களை வெளியிட்டு உதவினார்; பாடசாலைகள் தொடக்கினார்; அச்சகசாலைகளை நிறுவினார். பிரசங்க மாரி பொழிந்தார்; அன்றும் - இன்றும் - என்றும் நாவலரானார்.

நாவலர் பெருமான் தமது இலட்சியம் நிறைவேற அதற்கென ஒரு தருமம் ஏற்படுத்தினார். அத் தருமம் இன்றும் நிலவிவருவதை யாம் அறிவோம். நாடு அறியும். அப் பெரியாரின் இலக்குக்களை இன்று நாம் அறிந்து, அவர் காட்டிய வழியில் செல்லவேண்டியது அவசியமாகும்.

அவருடைய பணியைப்பற்றிச் சிறிதளவு எடுத்துக் காட்டுமுகமாக இச் சிறு நூலை வெளியிட்டுள்ளேன். இதில் நாவலர் அவர்களின் வரலாற்றுச் சுருக்கமும், அவர் கொண்டுள்ள இலட்சியங்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. முக்கியமான சில அம்சங்கள் 'அநுபந்தம்' என்னும் பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் குண நலன்களை அறியவேண்டியது அறிஞர் கடனாகும்.

இஃது மாணவர்களுக்கும், ஆசிரியர்க்கும், பிறர்க்கும் பயன்படும் என்பதும் எனது கருத்தாகும்.

சேற்றூர் அருணாசலக்கவிராயர் செய்யுள் வடிவில் இயற்றிய நாவலர் சரித்திரத்தையும், திரு. வே. கனகரத்தினம்பிள்ளை, ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை ஆதியோர் வசனவடிவில் செய்துள்ள நாவலர் சரித்திரங்களையும் படித்தற்கு இஃது உபகாரமாதலும் இதனைப் படிப்பவர்க்கு நன்கு விளங்கும்.

நாவலர் வித்தியாசாலை,<br>வண்ணார்பண்ணை,<br>யாழ்ப்பாணம்.

சி. சீவரத்தினம்<br>சுபகிருது ஸ்ரீ கார்த்திகை 4உ<br>19-11-1962.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நெடுங் காலம் தலைமையாசிரியராயிருந்த பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள் கொடுத்த

# அணிந்துரை

"நாவலர் சமயப் பணி" என்னும் வெளியீட்டுப் புத்தகத்தின் கோப்பு முறையைக் கண்ணுற்றேம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், தம் காலத்தில், அந்நிய மதத்தினரின் ஆட்சிமுறையினலும், அந்நிய மதகுருமார்களின் போதனை பிரசாரங்களினலும், அவர்கள் கல்வி பொருள் பட்டம் பதவி உத்தியோகமாதியவற்றை நம் நாட்டவர்க்கு வழங்கி வீசும் சூழ்ச்சி வலைகளினலும் நம்மவர் மதமாற்றத்துக்கு ஆளாதலையும், தமிழ்க்கல்வி யறிவு கலாசாரங்களும், சைவசமய அறிவு ஆசார அநுட்டானங்களும் பரம்பரைப் பண்பாடுகளும் ஆகியவை நாளுக்குநாள் தேய்ந்து குன்றி யொழிவதையும் தமது இளமையிற்றனே அவதானித் தறிந்தார்; அதனைப் பொறுக்காமல், அவற்றை நம நாட்டு மக்களிடையே வளர்த்து முன்போல் நன்னிலையில் நிறுவுதற்பொருட்டாக எழுந்த உணர்ச்சியாவேசத்தால், தாம் தியாகபுருடராகி, சுயநலப் பற்றற்ற துறவுநிலைபூண்டு வாழ்ந்து, அரும்பாடுபட்டு ஆற்றிய பொதுநலப் பணிகள் பலவற்றுள்ளும் பிரதானமான சில சில இலக்ஷிய அம்சங்களை எடுத்துக் காட்டி ஞாபகப்படுத்துகின்றது இவ் வெளியீடு. மேலும், இக்காலச்

சூழ்நிலையில், எம்மவர்க்கும் எமது பிற்சந்ததியா ருக்கும் உறுதி பயக்கத்தக்கனவான நாவலர் பெருமானின் இலக்ஷியங்களை அவர் காட்டிய வழிவகைகளைக் கடைப்பிடித்துப் போற்றி வளர்த்தற்கு ஊக்கமூட்டுந் தூண்டுகோலாய் உள்ளது இவ்வெளியீடு எனல் மிகையாகாது.

இன்னும், 'நாவலர் பெருமான் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்து ஆற்றிய அருந் தமிழ்ப்பணி சைவசமயப் பணி சமூகப்பணி முதலியவற்றை, இக்காலத்தில் எம்மவருள்ளே அவர்போல் தாமும் ஆற்றுதற் குத் தகுதியாக முழுத் தியாகபுருடராய் முன் வரத்தக்கவர்கள் முன்வருதலும், அவர்போல் முழுத் தியாகபுருடராய் வர இயலாதவர்கள் ஏகதேசத் தியாகிகளாய்ப் பொருளீதலாலோ - வாக்கினுலோ - செயலினுலோ - சிந்தனைசக்தியி னுலோ - இவற்றுட் சிலபல அம்சங்களாலோ தம்மால் இயன்ற அளவு உதவிசெய்து முயன்று அப் பெருமானின் இலக்ஷியப் பணிகளைத் தொடர்ந்து நடைபெறச் செய்தற்கு உதவிபுரிய முன்வருதலும் வேண்டும்' என்ற கருத்தைக் குறிக்கோளாகக்கொண்டு வெளியிடப்பட்டது இவ் வெளியீடு என்பதும் அறியவருகின்றது.

அன்றியும், "நாவலர் பெருமானது பணி கள் அழியாது தொடர்ந்து நடைபெறுவதற்கு யாது செய்தல்வேண்டும்? தமிழ்க் கலாபிமானி களும் சைவசமய அபிமானிகளுமாகிய எம்மவர் விழிப்புணர்ச்சியுடன் ஊக்கங்கொண்டு செய

லாற்றவேண்டும் — நாவலர் பெருமான் தமது பணிகளுக்கு ஈட்டிவைத்த மூலநிதியும் அதன் வருவாய்களும் நிலைதடுமாறி, அவமாய் வேறு வகையில் (வழிகளில்) விரயமாகும் காலச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவை அவ்விதம் ஆகாத படி அவற்றைப் பாதுகாத்து, அப் பெருமானது இலக்ஷியப் பணிகளின் பொருட்டே உபயோகப் படும்படியாக எம்மவர் சிந்தனைசெய்து ஊக்கங் கொண்டு ஆக்கவேலைகள் ஆவனபுரிந்து அப் பணிகளைத் தொடர்ந்து நடைபெறச்செய்தல் வேண்டும்'' என்ற கருத்தும் இவ் வெளியீட்டாளரின் உட்கிடையாதல் அறியப்படுகின்றது.

ஆதலால், ''இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்ற பழமொழிக்கு இயைய எயமவர் இப்பொழுது வாளா இருத்தல் புத்தியன்று — நாவலர் பெருமான் தம் பிற்சந்ததியாராய் வரும் தமிழ்ச் சைவசமய சாகியத்தாராகிய எங்களெல்லார் பொருட்டுமாக அரும்பாடுபட்டு, இத தருமம் நடைபெறுதலுக்குரிய விதானங்கள் பலவற்றை அமைத்து ஈட்டி வைத்துச் சென்ற மூலநிதியும் வருவாய்களும் வீணாக அவர் கருத்துக்கு மாறான வழிவகைகளில் விரயமாகத்தக்க காலச்சூழ்நிலை ஏற்பட்டிருக்கையில், எம்மவர் அறிந்தும் அறியாமலும் வாளா இருந்தால், எம் பிற்சந்ததியாருக்குரிய வைப்பாகிய தரும நிதியைப் பாழாக்கிய வீண் பழி யாரைச் சாரும்? — இவைபோன்றவற்றைச் சிந்தித்து அந்நிதி வருவாய்கள் வீணாகாதபடி ''ஒரு

தரும ஸ்தாபனக் குழு" (நாவலர் தருமபரிபாலன ட்றெஸ்ட்டி) ஏற்படுத்தி, அவற்றைப் பாது காத்து, நாவலர் பெருமான், தாம் பரகதியடைய முன்னதாகவே, தம் இலக்ஷியங்களுள்ளே சில பல தம் வாழ்நாளில் நிறைவேற்றப்படவில்லை என்று உலகுக்கு விஞ்ஞாபித்த எஞ்சிய அப் பணிகளையும் நிறைவேற்றல் ஒவ்வொரு தமிழரதும் சைவசமயத்தவரதும் பிறப்புரிமைக் கடனாகும்" என்பனபோன்ற நல்லெண்ணங்களை எம்மவர்க்கு உள்ளத்தில் உதிப்பிக்க வல்ல சாதனமாந் தகுதியும் இவ் வெளியீட்டுக்கு உண்டு என்னலாம்.

இவ்வாற்றால், இவ் வெளியீடு அவ்விதப் பொதுநலத் தொண்டில் ஈடுபாடு உடைய எல்லாருக்கும் கிடைக்கச் செய்தலையும், இன்னும் இதுபோன்ற ஊக்கத்தூண்டுகோலான முயற்சிகளைச் செய்தலையும் இவ்வெளியீட்டாளர் மேற்கொண்டு, தாமும் நாவலர் பெருமான் பணிகளின் ஆக்கவேலைகளிற் பங்குபற்றி முயன்று நல்வாழ்வு வாழும்வண்ணம் அவர்கட்கு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பாலித்துத் துணைநிற்க வேண்டுகின்றேம்.

**வித்துவான், ந. சுப்பையபிள்ளை**

2/1, ஐயனார்கோவில் வடக்குவீதி,
வண்ணார்பண்ணை.
1—11—62.

———

௦ திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை முன்னை நாள் தமிழ்ப் பேராசான், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த

# அணிந்துரை

நாவலர் அவர்கள் ஒரு வளரும் பயிர் என்பதை முளையிலேயே தெரிந்தவர் பார்சிவல் பாதிரியார். நாவலர், புலவர் பண்டிதர் வித்துவான் மகாவித்துவான் என்கின்ற வரிசைக்கு அப்பாற்பட்டவர். நீதி என்கின்ற உந்நத உலகில் தம் வாழ்க்கையை இட்டுக்கொண்டவர் நாவலர். அவருக்கு நிதி பொருளன்று. நீதி பொருள். நாவலர் உயர்ந்த சாதிமான். இந்த உண்மை நிலையை நன்கு உணர்ந்தவர் குறிப்பிட்ட பாதிரியார்.

நாவலரும் பாதிரியாரும் பன்னிரண்டு வருடத்துக்குமேல் இருமையின் ஒருமையுற்று வாழ்ந்து வந்தார்கள். இருவரும் புறத்தால் பிரியும் ஒருநாள் வந்தது. தம்மிடம் இங்கிலிசு படிக்கவந்த நாவலரை மம (எனது) குரு என்று, அகத்திலும் மெல்ல மெல்லப் புறத்திலும் வணக்கஉரை வழங்கிக் கொண்டே,

* 'தலைக்குமேலே கைகாட்டுந் தமிழருக்காகக் கதறிக்கதறி மண்டை வெடித்துத் தாங்கள் சாவீர்கள்".

---

* எஜமான் சமையற் பணியாளனைப் பார்த்து இதோ விருந்தாய் வந்திருக்கும் ஐயாவுக்கு வடை பாயசத்துடன்

என்று ஒரு சாபமொழியும் வழங்கினர் பார்சிவல் பாதிரியார். நாவலர் சைவம் வளர்க்கப் புறப்பட்டார். பாதிரியாருக்குப் பிரிவாற்றுமை கைம்மிக்கது. தங்கீழ்க் கிறிஸ்தவர்களைப் ⊙ பஞ்சாட்சரக்கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டே, பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு, சென்னை நோக்கித் தமிழ் வளர்க்கப் புறப்பட்டுவிட்டார் பாதிரியார். இவரைச் சாக்கிய நாயனுரோ டொப்பிட்டிருக்கிருர் ஆறுமுகநாவலர்.

நாவலர் அவர்களின் உண்மை நிலையை நன்குணர்ந்த ஒரே ஒருவர் பாதிரியார். நாவலரின் மருகரும் மாணுக்கரும் வித்துவசிரோமணியும் இலக்கிய இரசிக சிரோரத்தினமுமான ந. ச. பொன்னம்பலபிள்ளையும் நாவலர் அவர்களை உணர்ந்தவர். ஆனுல், நாவலர் அவர்களினிடம் தமக்கு எவ்வகையிலும் எட்டாத வெகு தொலைவில் உள்ளதென்பதையுந் தெளிவாக அறிந்திருந்தார். சதாசிவம்பிள்ளை முதலிய

---

நல்விருந்தளிக்க வேண்டுமென்று வாயாற் கட்டளையிடுகின்ருர். அதேசமயம், ஒரு கை தலையைத் தீண்டுவதுபோல மேலே உயர்ந்து, மறுப்புக்குறி செய்கின்றது. விருந்து வந்த ஐயா நாள்முழுதும் கொட்டாவியுடன் போர்புரிந்து தொலையவேண்டியவரே. இந்த உபசாரத்துக்குத் 'தலைக்கு மேலே கைகாட்டுதல்' என்று பெயர்.

---

⊙ பஞ்சாட்சரக் கிறிஸ்தவர் ஆவார் சம்பளக் கிறிஸ்தவர். ச-ம்-ப-ள-ம், பஞ்சாட்சரத்தாலாயது.

மாணவரும் நாவலர் பரம்பரையினரும், நாவலர் அவர்களை ஐந்தாங் குரவராக்கிக்கொண்டு, நாவலராதீனத்தம்பிரான்களாய் இறுமாந்திருக்கலாம் என்று எண்ணிவிட்டார்கள். அவர்களின் எண்ணம் தலைக்குமேற் கைகாட்டுவதாயிருப்பதைத் தமது ஐம்பதாம் வயசில் 1872-ல் நாவலர் அவர்கள் தெட்டத்தெளிய அறிந்துவிட்டார்கள். இதனை,

'ஓகோ! இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ சமயக் குருமார், சைவசமயக் குருமார் என்னும் இருசமய குருமாருடைய கருத்தும் தத்தஞ் சமயபத்தியை வளர்த்தலினிடத்ததன்று, தத்தம் வயிறு வளர்த்தலினிடத்ததேயாம்'

என்ற வசனம் உய்த்துணர வைக்கின்றது. குருமாருக்குச் சொன்னது ஏனையோருக்கும் பொருந்தும். இது 1872-ல் வெளியிட்ட யாழ்ப்பாணச் சமயநிலை என்ற துண்டுப் புத்தகத்திலுள்ளது.

வடக்கேயிருந்து வந்து வியாபாரஞ் செய்யும் பொருட்டு வண்ணார்பண்ணையில் வசித்த சாதாரண குடும்பமொன்றில் உள்ளது ஒரு பிள்ளை. அப்பிள்ளைக்குச் சுப்பிரமணியபிள்ளை என்று பெயர். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அட்சராரம்பந்தொட்டுப் படித்து வந்தது அப்பிள்ளை. பிள்ளையின் ஒழுக்க விசேஷம் நாவலர் அவர்களைக் கவர்ந்து விட்டது. நாவலர் அவர்கள் அப்பிள்ளைமீது

தமது மாசற்ற அன்பைச் சொரிந்தார்கள். தம் தருமத்தை நிலைநிறுத்துவதற்கு ஒரு பிள்ளையைக் கடவுள் தந்திருக்கிறார் என்று நம்பினார்கள். பிள்ளை நாவலர் காட்டிய வழியில் மயிரிடை தவறாது நடந்து வந்தது. ஆனால் விதி வேறு விதமாயிருந்தது. நாவலர் அவர்கள் கண்காணச் சுப்பிரமணியபிள்ளை சிவபதமெய்தினார். சுற்றத் தொடர்புகளை அறுத்து, வேறு வழியிற் சென்ற நாவலர் அவர்களை, அவ்வழிக் குறுதுணையென்று நம்பியிருந்த சுப்பிரமணிய பிள்ளையின் மறைவு மிகமிக வருத்திவிட்டது. நாவலர் அவர்கள் அழுதுவிட்டார்கள்; உருகி விட்டார்கள். நாவலர் அவர்கள் உருகி உகுத்த கண்ணீர் பன்னிரண்டு அத்தியாயங்கள் கொண்ட சுப்பிரமணியபிள்ளையின் சரித்திரமாயெழுந்தது. அச்சரித்திரத்தில் தமது நோக்கங்கள் நம்பிக்கைகளை வெட்ட வெளிச்சமாகக் காட்டியிருக்கின்றார்கள். அவ்வளவிலும் அவர்களின் இருதய நெகிழ்வு அடங்கியதில்லை. அந்நெகிழ்வு சுப்பிரமணியபிள்ளைமீது இருபது பாடல்களாய் உதித்தது. மனிதரைப் பாடாத நாவலர் அவர்கள் சாதாரண குடும்பத்திற் பிறந்த ஏழைச் சுப்பிரமணியபிள்ளையைப் பாடினார்கள்.

சதாசிவம்பிள்ளை முதலிய இருவகைப் பரம்பரையினரும் நாவலர் சொல்வழி நில்லாது, சுப்பிரமணியபிள்ளையின் சரித்திரத்தை வெளியிடுவதுபோற் பாசாங்குசெய்து, பல வருடம் மறைத்து வைத்திருந்து பின் அதனைச் சாம்

பர் செய்துவிட்டார்கள். பாடல்கள் ஒருவாறு உயிர்பிழைத்து வெளிவந்துவிட்டன.

பரம்பரையின் போக்கைக்கண்ட நாவலர் அவர்களின் நிலை 1872 அளவில் அகத்தே வேறு நிலை எய்தியது.

x 'மணி கொண்ட' என்ற பாட்டில் சைவ வித்தியாவிருத்தி கைகூடாதாயின் 'உயிர் விடுதல் திண்ணம்' என்று, தம்மை உடையவர்

---

x மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டி லுன்சமய
வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியிம்
மைப்பொருட் பேறொ ழித்தே
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோ ரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப்பினஃ தூனையிகழு
மந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருற
லறிந்துமொரு சிறிது மருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னுயிர்விடுத
றிண்ணநீ யறியா ததோ
சிறியேன தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச்
சிற்றம் பலத் தெந்தையே.

யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயர்கொடுத்து, ஒரு வித்தியாசாலை தாபித்தார்,

முன்னிலையில் சபதமிட்டெழுந்த நாவலர் அவர்களின் வாழ்க்கை, இறுதியில் * 'அல்லிக்

---

அக்காலத்தில் இவருடைய கையிற் பணமில்லாமையாற் பிடியரிசி தண்டிச்சேர்க்கும் பொருள் கொடுத்து, தம்மிடத்தே, முன்கற்ற சதாசிவப்பிள்ளை முதலானவர்களை உபாத்தியாயர்களாக நியமித்து, ஒருவாறு அதனை நடத்தி வந்தார். இப்படிப்பட்ட சமயத்திலே ஒரு வர்த்தகசாலை விலைக்கு வாங்கத்தக்கதாக வந்தது. அதனை வித்தியாசாலைக்காக வாங்க விரும்பியும் போதிய பணம் கையிலில்லாமையால் மனம் வருந்திக்கொண்டிருக்குங் காலத்தில், ஒருநாள் பூசையிலே தமது உடையவரை நோக்கி அழுது ஒரு செய்யுள் சொன்னார். அச்செய்யுள் இது.

கொழும்பிலுள்ள பிரபுக்களுள்ளே ஔதாரிய குணத்திற் சிறப்புற்றோங்கிய இ. நன்னித்தம்பி முதலியார் என்பவர் இவ்வித்தியாசாலைக்காக 400 ரூபா அனுப்பியிருந்தார். அந்தப்பணம் உடையவரை நோக்கி அழுது புலம்பின அன்றே வந்து சேர்ந்தது. அப்பணத்தை முலமாக வைத்துக்கொண்டு அந்த வர்த்தகசாலையை வாங்கினார்.

---

* அல்லிக் கமலத் தயனுமாலு மல்லாதவரு மமரர் கோனுஞ்
சொல்லிப்பரவு நாமத்தானைச் சொல்லும் பொருளு மிறந்த
[சுடரை
நெல்லிக்கனியைத் தேனைப்பாலை நிறையின்னமுதை
[யமுதின் சுவையைப்
புல்லிப்புணர்வ தென்றுகொல்லோ வென்பொல்லா
[மணியைப் புணர்ந்தே.

— திருவாசகம்.

சிவபதப்பேறு எய்துதற்குச் சில தினங்களுக்கு முன் ஒருநாள், எதிரில் நின்றவரையுந் தெரியாமலே, தமது மாளிகை நடு அறையில் அங்கும் இங்கும் உலாவி உலாவி மேற்குறிப்பிட்ட திருவாசகத்தைப் பலமுறை ஓதிக்கொண்டு, உருகிப் பரவசராயிருந்தார். (ஆ. நா. சரி.)

கமலம்' என்ற திருவாசகத்தில் உருகி உருகிப் 'புல்லிப் புணர்வதென்று கொல்லோ என்பொல் மணியை' என ஓதிப் பூர்த்தி எய்தியிருக்கின்றது. நாவலர் அவர்களின் மணியான வாழ்க்கை மணியில் தொடங்கி மணியில் மணியாய் நிறைவுற்றிருக்கின்றது.

இஃதிவ்வாறிருக்கச் சிவரத்தினம் என்கின்ற உபாத்தியாயர் சில வருஷங்களுக்கு முன் என்னை அணுகினார். 'உண்டிருந்து வாழ்வதற்கே' உரைகள் செயல்களை அர்ப்பணிக்கின்ற உபாத்தியாயர்களை நோக்கிப் பழகிய வகையில் அவரைப் பொருள் செய்யாது நோக்கினேன். அவர் மீண்டுவிட்டார். பின் ஒருமுறை சந்தித்துத் தாம் நாவலர் வித்தியாசாலையிற் படித்துப் பின் அங்கேயே படிப்பித்து வருகிறார் என்றார். நாவலர் வித்தியாசாலை தோன்றியபோதே அங்கேயுள்ள தூண் வரிசைகள் தோன்றி இப்பொழுதும் அப்படியே அசைவின்றி நிற்கின்றன தாமே. அந்த முறையில் திரு. சிவரத்தினமும் அங்கே படித்து அங்கே படிப்பிப்பதில் என்ன விசேஷம் இருக்கப் போகிறது என்று எண்ணினேன். அவர் மௌனியாய் இருந்துவிட்டுப் போய்விட்டார். ஆனால் அவரோ விடாக்கண்டர். மேலும் மேலுந் தொடர்ந்தார். மற்றொருநாள் 'நாவலர் சமயப்பணி' என்ற கையெழுத்துப் பிரதியுடன் தோன்றினார். அதனை வாசித்தபிறகு அவரை உற்று நோக்கினேன். மனங் கலந்த

உரையாடலும் நடந்தது. நாவலர் அவர்களின் அன்புக்குப் பாத்திரமாயிருந்து மறைந்த சுப்பிரமணியபிள்ளை தாமே, இப்பொழுது சீவரத்தினம் ஆசிரியராய்ப் பிறந்து வந்திருக்கிறார்போலும் என்ற எண்ணம் என் இருதயத்தில் உதித்தது. அவர் எழுதிய புத்தகம் நாவலர் அவர்களின் நோக்கங்கள் நம்பிக்கைகளை ஒரு அளவுக்கு எட்டியுந் தொட்டும் பார்ப்பதாயமைந்திருக்கின்றது. புத்தகம் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கற்றோர்கள் யாவரும் வாசிக்கத்தக்கது.

திரு. சீவரத்தினம் ஆசிரியர் சிறுகதை எழுத்தாளராயோ, பெருநாவல் படைப்பவராயோ ஆகாமல், 'நாவலர் சமயப்பணி' என்ற புத்தகம் எழுத நேர்ந்தது, இந்த நூற்றாண்டின் அபர பக்கத்திலும் நாவலர் அவர்களின் நோக்கத்துக்கும் சற்றே இடம் உண்டு என்னுங் கருத்துப்போலும். கடவுள் கருத்தை ஆர் அறிவார். நாவலர் அவர்களின் நோக்கம் படர்தற்குத் திரு. சீவரத்தினம் ஒரு தனிப் பற்றுக்கோடு என்பது எனது கருத்து.

சி. கணபதிப்பிள்ளை

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1—11—62.

———

○ பண்டித வித்துவானும், சைவப்புலவரும், வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள் தந்துள்ள

# மதிப்புரை

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இயற்றிய தர்மங்களுள் உயர்ந்தது வித்தியாதர்மம். அத்தர்மத்தை வளர்க்க அருங்கலை நியமமாக அமைந்து தொண்டாற்றி வரும் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையும் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையும் முறையே ஈழத்துக்கும் தாய் நாட்டுக்கும் சைவம் தமிழ் வளர்த்தற்கான இரு கண்கள். சிதம்பர வித்தியாசாலையி லிருந்து கிளர்ந்த ஒளி வித்துவான் ந. சுப்பையபிள்ளை. வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கிளர்ந்தஒளி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

இவ்விரு பெரியாரது சிஷ்ய பரம்பரையில் வந்து ஆசீர்வாதம் பெற்ற மாணவருள் திரு. சி. சீவரத்தினம் ஆசிரியர் சிறந்தவர். அவர் இப்பாடசாலையிற் கற்றுக் கற்பித்து வருபவர். இவருடைய பரிச்சயம் உண்டான முதலில் இவரடக்கம் எனக்குப் புலனாகவில்லை.

பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

ஆதலை இவர்வாயிலாக உணர்ந்தேன். இவர் உரைகல்லேதான் என்ற தெளிவு பின்னர்த் தான் எனக்குண்டானது. தராசென்றும் சொல்லலாம். அவரது செயற்பண்பை இந்நூற்பண்பு நன்கு காட்டும். அதன்மேலே நான் மதிப்புரை வேறெதனைச் சொல்வதென அறியேன். அவர் கருத்துக்கள் உயர்ந்தவை. இந்நூலைக் கற்போர்க்கு அவை நன்கு புலனுகும். அவர் தொண்டுக்கு எனது வாழ்த்துக்கள் உரியன.

**இ. திருநாவுக்கரசு**

நாவலர் வித்தியாசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். 29-10-62.

௨

# நாவலர் சமயப்பணி

## நாவலர் தோற்றம்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய பிற நாட்டவர் ஈழநாட்டைக் கைப்பற்றிய காலத்திலே சைவசமய வளர்ச்சியைக் குறைத்துத் தமது சமயமாகிய கிறீஸ்த சமயத்தைப் பரப்ப முற்பட்டனர். உத்தியோகம், பணம் முதலியவற்றால் ஆசைகாட்டி, நம் சமயத்தவரிற் பலரைத் திருப்பினர். வலாற்காரமாகவும் தம் சமயத்திற் புகுத்தினர். சைவக் கோயில்களை இடித்துத் தங்கள் கிறீஸ்தவக் கோயில்களைக் கட்டினர். இவ்விதமான பல செய்கைகளினால் சைவசமய வளர்ச்சி குன்றிவரத் தொடங்கியது. இவர்களின் பின்னர் ஆங்கிலேயர் நம் நாட்டைக் கவர்ந்தனர். அவர்களும் தங்கள் சமயமாகிய கிறீஸ்த சமயத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஆகவே அக்காலம் தமிழுக்கும் சைவசமயத்துக்கும் இருள் சூழ்ந்த காலமாயிருந்தது.

திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம் முதலிய சிவஸ்தலங்களையும் கதிர்காமம் என்னும் சுப்பிரமணிய ஸ்தலத்தையும் தன்னிடத்தே கொண்டது இலங்கை. அதன் வடபாகமாகிய யாழ்ப்பாணம், ஒருகாலத்தில் சைவசமயிகளுக்கும், சைவாலயங்களுக்கும, சிறப்பாக அரச

கேசரீ முதலிய தமிழ் வித்துவான்களுக்கும் உறைவிடமா யிருந்தது; பின் அந்நியர் ஆட்சிக் காலத்தில் இழிநிலை யடைந்திருந்தது.

அந்தக் காலத்திலே ஞானப்பிரகாசர் மரபு ஒன்றே தமிழுக்கும், சைவ சமயத்துக்குமாக வாழ்ந்து செழித்தோங்கியது. இவர் உள்ளும் புறமும் சைவர்; இவர் மரபிலே உதித்த அருந் தவப் புதல்வரே நாவலர் அவர்கள். இவர் தமிழையும் சைவசமயத்தையும் ஐயந் திரிபறக் கற்று மிக்க பிரகாசத்துடன் விளங்கினர். சமயத்துக்காக அரும் பாடுபட் டுழைத்தார். உடல், பொருள், ஆவி அனைத்தையும் இதற்காக அர்ப் பணித்தார். கிறீஸ்தவர்களுடைய மதப்பிரசாரத்துக்கெதிராக வேலைசெய்து அவர்கள் துர்ப் பிரசாரங்களை முறியடித்து சைவசமயத்தை வளர்த்து ஐந்தாங் குரவரெனப் போற்றப் பட்டார்.

நாவலர் பெருமான் 1822-ம் ஆண்டு மார் கழி மாதம் 5-ந் திகதி (18-12-1822) யாழ்ப்பாணத்து நல்லூரிலே அவதரித்தார். ஞானப்பிரகாசர் மரபிலே இலங்கை காவல முதலியார் புதல்வர் பரமானந்தர். அவர் புதல்வர் கந்தர், இலங்கையர் என்னும் இருவர்.

கந்தர் என்பவரின் புத்திரர் ஆறுமுகர். இவர் தம் நாவன்மையால் நாவலர் என்ற பட்டப்பெயரை இளமையிலேயே பெற்ருர். தாயார் பெயர் சிவகாமி அம்மையார். பெற்ருேர்கள் சைவசமய நெறி பிறழாது வாழ்ந்து வந்தவர்

கள். தமிழ்ப்புலமையும், சைவசமயப் பற்றும் உடையவர்கள்.

ஆறுமுகனுர் அவதரித்ததும் தமிழும் சைவமும் மறுமலர்ச்சியடையத் தொடங்கின. தமது மூன்ரும் வயதிலேயே தெள்ளிய தமிழ் பேசத் தொடங்கினுர். சிவன், கந்தன் என்னும் பெயர்களில் இவருக்குப் பிரீதி யதிகம். அவ்வயதிலேயே பத்திப் பாடல்களைக் கேட்பதிலும், கந்த புராணம் படிக்கும் இடங்களுக்குச் செல்வதிலும் விருப்பமுடையரா யிருந்தமை இவரிடம் சமயப் பற்று எவ்வளவு தூரம் முளைகொண்டு இருந்தது என்பதனை அறிவுறுத்துவதாகும். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்ற முதியோர் வாக்குக்கிணங்க ஆறுமுகனுர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பெரியவராகிக்கொண்டே வந்தார். ஏடு தொடக்கப் பெற்று எழுத்து அறிந்ததும் நல்லூரில் பள்ளிக்கூடம் வைத்திருந்த சுப்பிரமணியபிள்ளையிடம் ஆறுமுகனுர் கற்றுவந்தார்.

## கல்வியறிவும், சமயஞானமும்

அக்கால வழக்கப்படி வாக்குண்டாம், மூதுரை, நன்னெறி ஆகிய நீதி நூல்களையும், நிகண்டு முதலிய கருவி நூல்களையும் முறையாகக் கற்றுத் தமிழ்ப்புலமை அடைந்தார்.

அதனேடு சைவசித்தாந்த சாத்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்ருர். சமய சாஸ்திரங் கற்பதிலே மாத்திரமன்றி அவற்றின்படி ஒழுகி

யும் வந்தார். அதிகாலையில் நித்திரைவிட்டெழு வார். திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் பண்ணுவார். முருகன் ஆலயஞ் செல்லுவார். இதன்பின்பே அவர் எக்காரியத்தையுஞ் செய்யத் தொடங்குவார்.

நாவலர் புலமையை அறிந்த பாதிரியார் தமது பாடசாலையிலேயே கற்பிக்குமாறு வேண்டினர் பாதிரியார் விரும்பியவாறு அங்கே கற்பித்து வந்தார். அங்கே கற்பித்த போதும் தமது சமயப்பணியை விடவில்லை. பாதிரியார் கேள்விப்படி பைபிலை மொழிபெயர்த்துக் கொடுத்தார். அதனால் கிறீஸ்த சமயத்தின் பொருளையும் அறிந்து கொண்டு அச்சமயத்தின் போலி வேஷங்களைக் கண்டித்தார். அவர்கள் செய்யும் சைவசமய தூஷணங்களுக்குத் தக்க விடையிறுத்தார். இவரது தருக்க ரீதியான வினைக்களுக்கு விடையிறுக்க முடியாது பாதிரிமார் திண்டாடினர்.

வேதாகமங்களைப் போற்றி வளர்த்து வந்தார். பதி, பசு, பாசம் ஆகிய மூன்றின் விளக்கத்தினையும மதித்தார். சிவாகமத்திற்கு மாறானதைக் கண்டித்து வந்தார். நாவலர் பேச்சுடன் நிற்காது செயலில் முனைந்து நின்றவர். ஏராளமான கருவி நூல்களையும் தாமே அச்சகம்நாட்டி வெளியிட்டார். சைவ சமயத்தையும், புராணங்களையும தூற்றிக் கேலிசெய்தவர் வாயை யடக்கினர். பாதிரிமாருக்குச் சரியான பாடங் கற்பித்தார். யாழ்ப்பாணத்தவர்களின் சமயநிலையை விளக்கி ஒரு நூலை வெளியிட்டார்.

அதனுல் கிறீஸ்தவர்களாக மதம்மாறின பலர் சைவசமயத்தைத் தழுவினர்.

ஆறுமுகனுர் கிறீஸ்தவர்கள் செய்யும் கண்டனங்களுக்கு விடையாகவும், அவர்கள் தம் கிறீஸ்த சமயத்திற் சேர்ப்பதற்காகச் சைவ சமயத்தை இழித்துக் கூறுவதையும் பொறுக்க முடியாது சைவசமயமே மெய்ச் சமயமென்று அதன் உண்மைகளைத் தருக்கரீதியான முறையில் எழுதி "சைவ தூஷண பரிகாரம்" என்னும் நூலாக வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதன் ஒரு பகுதி இது:— "அநாதி பகவனுகிய பரமசிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயமாம். இச்சற்சமயம் வழங்கும் நமது ஆரிய கண்டத்திலே மிலேச்சர்களாகிய பாதிரிகள் புகுந்து இச்சைவத்தை விளக்கும் சிவ சாஸ்திரங்களை சிறிதும் அறியாமையினுலும், தாங்கள் முன்னே தழுவிக்கொண்ட துர்ச்சமயமாகிய கிறீஸ்து மதத்தின்மேல் வைத்த துரபிமானத்தினுலும், அப்புன்மதத்தைப் பிரசாரித்தலே தங்களுக்கு எளிதிற் பொருள் வரும் வழியாய் இருத்தலானும, சைவ சமயத்தைக் குருட்டுவழி முதலியவைகளால் அநியாயமாகவே தூஷிக்கின்ருர்கள்.

நமது சிவசாஸ்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும், அப்பாதிரிகளது பொய்ந்நூலாகிய விவிலியநூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்கநூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் அத்தூஷணங்கள் ஒக்கு

மென்று மதிமயங்கி, கிறீஸ்துசமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்ருர்களே” என்பது. இதனை நம் சைவசமய மக்கள் உற்று உணர வேண்டாமா? அது இன்றளவும் பொருந்துவன ஆகுமன்ருே!

“நமது தமிழ் நாட்டினருக்கு உபயோகமாகும் பொருட்டு, சமய குரவர்கள் நால்வராலும் வேதங்களின் அர்த்தங்களைப் பெரும்பாலும் அநுசரித்து அருளிச்செய்யப்பட்ட தேவாரம் திருவாசகம் என்னும் திராவிட வேதங்களும், மெய்கண்டதேவர் முதலிய சிவானுபூதிமான்களால் ஆகமங்களின் அர்த்தத்தையனுசரித்து அருளிச்செய்யப்பட்ட சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய திராவிட சித்தாந்தங்களும், உளவாம்.

இந்நூல்கள் எல்லாவற்ருலும் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமய இலட்சணங்களெல்லாங் குறைவற அமைந்த சத்திய சமயமென்று சுருதி யுத்தி அநுபூதிகளாலே நிச்சயித்து, ஆதிகாலந் தொடங்கிப் பரத கண்டத்திலுள்ள நமது முன்ஞேர்களாகிய சகல மகான்களும் அதனையே அங்கீகரித்துக்கொண்டு வந்தனர். அதனையே நாம் எல்லாம் அங்கீகரிக்கின்ருேம்.

இன்னும் சிவனெருவரே பரமபதியென்றும், சைவசமயமே சற்சமயமென்றும், துணிந்த சைவர்களாகிய நாங்கள், மேற்கூறியவாறே பாதிரிமார் நம் சமயத்தவர்களை மதமாற்றஞ்

செய்தலைக் கண்டுங் கேட்டும் வாளாவிருப்பது அதிபாதகமாகும். ஆகையினாலே நம் சமயமாகிய சைவசமயத்தைப் பரப்பவேண்டியது சைவ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்றும்" தாம் வெளியிட்ட நூல்களில் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

நாவலர் உள்ளம் சைவப் பிரசாரத்திலே பதிந்துபோனது வீட்டாருக்கு அவ்வளவு பிடிக்கவில்லை. "இவர் போக்கு ஒருமாதிரி யிருக்கிறதே. காற்கட்டுக் கட்டிக் குடும்ப சக்கரத்தில் சிக்கவைத்தால், இவர் அடங்கிப் போவார்" என்று நினைத்தனர். வாலிபக்காளை, நல்ல அறிவாளி, செயலாளி இவருக்குப் பெண்கொடுக்கப் பலர் முன்வந்தனர். இஃது ஒருவாறு அவருக்குத் தெரிந்தது. 'இந்த ஒரு பேச்சுமட்டும் என்னிடம் பேசவேண்டாம்' எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார் ஆறுமுகனார். ஆயுள் முழுதும் முறையான பிரமசரியம் காத்தார். கனவிற் கூட பெண்நினைப்பில்லாமல் காமத்தை யெல்லாம் சிவகாமமாக்கினார். வயசுக்குரிய ஆசாபாசங்களையெல்லாம் சைவநேசமாக்கினார். ஒரு நொடிகூடப் புறஞ்செல்லாமல் உடல், உயிர், உளம் எல்லாம் தமிழுக்கும் சைவசமயத்துக்குமாகத் தியாகஞ் செய்தார்.

பாதிரிமார் பாடசாலைகளில் சைவப்பிள்ளைகள் படிக்க இடர்ப்பட்டதை யுணர்ந்தார். அவருடைய மனச்சாட்சி, "உனது நாட்டில் அன்னிய தேசத்துப் பாதிரிமார்கள்வந்து தம் சம

யத்துக்குச் செய்யும் பணியைப்பார்; நீயும் தமிழுருக்கும் சைவத்துக்கும் இத்தகைய பணி செய்; பாதிரிமார் பள்ளிக்கூடங்களில் சைவப் பிள்ளைகள் இடர்களைப் பார்; கல்வியே உயிர்நிலை" என அறிவுறுத்தியது. இதனை நாவலர் உணர்ந்து மூன்று உறுதிகளைப் பூண்டார்.

1. **தமிழர் சிவநெறியில் பயில வித்தியாசாலைகள் நாட்டுதல்.**

2, **அச்சுப்பொறி வைத்து நல்ல நூல்களை அச்சிட்டு வழங்குதல்.**

3. **சைவசமயப் பிரசாரகரைத் தயாரித்தல்.**

இந்த நோக்கங்கள் நிறைவேறக் கீலக வருடம் ஆவணி மாதம் ஐந்தாந்திகதியிலே ஒரு வித்தியாசாலை ஸ்தாபித்தார். அப்பாடசாலையை நடாத்த முதலில் வெகு கஷ்டப்பட்டார். ஆயினும் பணக்காரரைக் கெஞ்சவில்லை; சந்தாக் கேட்கவில்லை; பிடியரிசி தண்டினர். "தமிழுக்காக — சைவத்திற்காக அரிசி கிளையும்போது ஒருபிடி போடுங்கள்" என்றார் அதை விற்றுப் பாடசாலையை நடத்தினார். பின்னர் 1848-ம் ஆடு செப்ரெம்பர் மாதம் பாதிரியார் பாடசாலையை விட்டுத் தம்சமயப் பிள்ளைகட்குப் படிப்பிக்கும் பொறுப்பைத் தாமே ஏற்று நடத்தி வந்தார். சிவகைங்கரியமே என் வேலையென உறுதி கொண்டார். இதனைக் கேள்வியுற்ற தமையன்மார் "நீ என்ன புத்தியீனஞ் செய்தாய்! இந்தச் சம்பளம் நீ இனி எங்கே பெறுவாய்" என்று கடிந்து கண்டித்தனர். "நான்

உங்களிடம் வந்து பொருள் கேட்காதிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறி அவர் வாயை அடக்கிவிட்டுத் தம் சமயப் பணியைத் தொடர்ந்து செய்துவந்தார் நாவலர் பெருமான்.

அன்றுமுதல் வீட்டைக்கூட மறந்து தமது ஜீவன விரதமான சைவசமயத் தொண்டிலேயே ஈடுபட்டார். பரம்பொருளான சிவனை நம்பிச், சைவசீலம்பூண்டு, தமது கடமையைச் செவ்வனே செய்து வந்தார். பாடசாலை வளர்ந்து வந்தது. பிள்ளைகள் தொகை அதிகரித்தது. பின்னர்ச் சேர்ந்த பணத்தைக்கொண்டு வித்தியாசாலை தாபிப்பதற்கு நிலம் வாங்கினார். அதன் வளர்ச்சியும் அவரின் மனத்தை மகிழச் செய்தது.

அத்துடன் நில்லாது வெள்ளிக்கிழமை தோறும் சமயப்பிரசங்கங்கள் செய்துவந்தார். யாழ்ப்பாணத்துச் சமயநிலையை எடுத்து விளக்கினார். அதில் நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமைகளையும், அதனாலே வரும் முத்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும், கேட்டாயினும் அறியவேண்டும். உங்கள் பிள்ளைகட்கு இவைகளைப் படிப்பிக்கவேண்டும். உங்கள் கோயில்களிலே சிவபக்தியை வளர்த்தற்கு வேண்டிய

வேதபாராயணங், தேவார திருவாசக பாராயணம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்க வேண்டும். கோயில்களைப் புதுக்குவித்துப் பூசை முதலியன கிரமமாகச் செய்யவேண்டும் என்றெல்லாம் எடுத்துக்கூறி விளக்கினுர்.

இன்னும் சைவசமயத்துக்கு விரோதமான மதுபானம், மாமிசபோசனம், களவு, வியபிசாரம் முதலிய தீமைகள் தலைப்படாவண்ணம் விலக்குங்கள். நீங்கள் வருந்தித் தேடிய பணத்தைக் கல்விப்பணி, சமயப்பணி முதலிய நற்கருமங்களிற் செலவிடுங்கள். கோயில்களிலே வீண் வேடிக்கைகளைச் செய்வதை நிறுத்துங்கள். கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்தவர்களையே குருமாராகக் கொள்ளுங்கள் என்று கூறி வற்புறுத்திச் சைவசமயத்தை வளர்த்து வந்தார்.

நாவலர் தம் வாழ்நாட்களிற் கருதிய பல செயல்களைச் செய்து முற்றுவிக்கும் ஆற்றல் படைத்தவர். அவருடைய இறுதிக் காலத்தில் அவர் மனதை வாட்டியது திருக்கேதீச்சர விஷயம. தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்ருகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனுர் திருப்பதிகம் ஒன்றிருக்கின்றது; மற்றென்ருகிய திருக்கேதீச்சரததுக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் திருப்பதிகம் ஒன்றும் சுந்தரமூர்த்திநாயனுர் திருப்பதிகம் ஒன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் இலங்கையின் வடபாகத்தில் மன்னுருக்குச் சமீ

பத்திலே இருக்கின்ற 'மாதோட்டம்' என்னும் இடத்தில் இருக்கின்றது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து கிடக்கின்ற தென்பதனையும் அதனைப் புதுக்கவேண்டு மென்பதனையும் சைவமக்கள் எல்லோரையும் சிந்திக்கும்படி எடுத்துச் சுட்டிக் காட்டியுள்ளார். திருப்பணியை மேற்கொள்ளுங்கள். உங்களுக்கு இறைவன் துணைபுரிவான் என வேண்டிக்கொண்டார். அது வீண்போகவில்லை. அப்பணி இன்று ஓரளவு முற்றுப்பெற்று நித்திய பூசை முதலியன செவ்வனே நடைபெற்றுவரும் பெரும் பணியில் சைவநன்மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர். நாவலர் அவர்களின் அன்றைய பணி அவரில்லாத போதிலும் இன்றளவும் நடைபெற்று வருகின்றது. அவரது தீவிரமான சமயபத்தி சைவ மக்கள் மனதைக் கவர்ந்துவிட்டது.

இவ்வாறு நம் நாவலப் பெருந்தகை செய்த சமயத்தொண்டு நலல பலனையே அதிகமாகக் கொடுத்தது; அவரைக் கடுமையாகத் தாக்கிய பகைவர்கூட அதை ஒப்புக்கொள்வர்.

## பிரசாரத்தின் பயன்

நாவலர் பிரசங்கத்தைக் கூட்டங் கூட்டமாய் மக்கள் வந்து கேட்டனர்; அறியாமையையொழித்தனர்; சைவநெறியை யறிந்தனர்; பலர், கள், ஊன் உண்பதை நிறுத்தி தூய சைவ உணவுண்டனர்; நாத்திகரும் சிவபக்தி செய்தனர்; கந்தபுராணம் பெரியபுராணங்களை ஓதினர்; விபூதி உருத்திராட்சம் தரித்தனர்;

சிவாலய தரிசனம் செய்தனர்; கோயிற் சந்நிதியில் மனமடங்கி வணங்கினர்; பக்திப் பாடல்களைப் பாடினர்; விரதங் காத்தனர்; பஞ்சாட்சரம் செபித்தனர்; வாய்திறந்து சிவநாமஞ் சொல்லக் கூசியவர்கள் தேவாரத்துடன் சிவகோஷஞ் செய்தனர்; சிவாகமங்களை மூடக்கொள்கைகள் என்று ஏசியவர்கள் பெரிய புராணத்தையும், கந்தபுராணத்தையும் படித்தும் கேட்டும் பரவசமானுர்கள்; இந்துக்களை அஞ்ஞானிகள் என்ற பாதிரிமாருக்குத் தமது மெய்ஞ்ஞானத்தை விளக்கினுர்; ஆங்கில மோகத்தாலும், பரசமய மயக்கத்தாலும் சைவதூஷணஞ் செய்து நடத்தைகெட்ட நாத்திகரும் சிவநிந்தையைவிட்டு ஆஸ்திகரானுர்கள்; உருவ வழிபாட்டைக் காட்டுமிராண்டி வேலையென்று தூற்றியோர், கோயில் மூர்த்தியை விழுந்து விழுந்து கும்பிட்டனர்; சட்டை தலைப்பாகையோடு முன்பு மதிப்பாக ஒரு கும்பிடுபோட்டு, "சிவனே, என்காரியம் பலிததால் உன்னை நம்புவேன்" என்றவர், இப்போதெல்லாம் "எல்லாம் சிவன் செயல்" என்பதை நம்பி, மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு, பயபக்தியுடன் சிவனை வணங்கினர்; பிழைப்புக்காகக் கற்ற ஆங்கிலப் படிப்பில் பிடிப்புண்டு நமதருள் நூல்களை அலட்சியம் செய்தவர்களும், நாவலர் விரிவுரை சொற்பொழிவுகளை வணக்கத்துடன் வந்து கேட்டனர்; "உடலே உறுதி, கண்டதே காட்சி" என்கின்ற சாருவாக சிரோமணிகளும் உடலின் நிலையாமையை உணர்ந்து சீவனுள்ளபோதே சிவநேசச் செல்வந் தேடினர்; இவ்வாறு சமயச் சீர்திருத்தங்கள் பல நடந்தன.

நாவலர் வாக்கைக் கேட்டவர் வாழ்வே புதுமை பெற்றுப் புனிதமானது. கருமிகள் தருமவான்களானுர்கள். காமிகள் சிவகாமிக ளானுர்கள். தாசிலோலர் விபசாரத்தை விட் டொழித்தனர். பெண்பித்தர் ஒரு மனைவியுடன் இல்லறமாகிய நல்லறம் பூண்டொழுகினர். துன்மார்க்கர்கள் சன்மார்க்கர்களாயினர். பொய் யர் மெய்யரானுர். பசுக்களைத் துன்புறுத்திய வர்கள் அன்புடன் பரிந்து பசுக்களைப் பேணி னர். காலத்தை வீணுக்கியவர்கள் இப்போது கல்வி வளர்ச்சியிற் செலவிட்டனர். நாவலர் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து சிலர் முறையாகத் தமிழுஞ் சைவமுங் கற்கத் தொடங்கினர்.

## கடல் கடந்தும் புகழ்

இவ்வளவு அரிய பெரிய காரியங்களைத் தூண்டிய செஞ்சொற் கொண்டலான நாவலர் புகழ் இலங்கையைத் தாண்டி வடதேசமாகிய இந்தியாவிலும பரவத் தொடங்கியது. சென்னை வரவழைத்தது. முதன்முதலாக அங்கு பயண மானுர். அக்காலததில் வேதாரணியம் வழியா கச் செல்வது வழக்கம் நாவலர் அவர்கள் வேதாரணியத்தில் அடிவைத்ததும் "வருக! வருக! திருநெறிச் சைவந் தழைக்கவந்த பெருஞ் சொற் புலவர் வருக!" என்று வரவேற்றனர். தமிழ்நாடெங்குஞ் சென்று தம் சமயப்பணி யைச் செய்தார்.

அக்காலம் திருவாவடுதுறை ஆதீனம் சைவ ஒளியும், தமிழ்மணமும் பரப்பியது. புலவர்க

ளுக்கெல்லாம் அது தாயகம் போன்றிருந்தது. அங்கே விளங்கிய பண்டாரச்சந்நிதிகள் அம்பலவாணதேசிகர். அவர் பெரும்புலவர்; முத்தமிழ் வித்தகர். அவருக்குக் கீழே சின்னப்பட்டத்தில் இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் செந்தமிழ்க் கற்பகம். புலவர் பெருமையுணர்ந்து மரியாதை செய்யும் புண்ணியர். மீனுட்சி சுந்தரம்பிள்ளையை மகாவித்துவான் பட்டமீந்து திருவாவடுதுறையில் வைத்து ஆதரிக்கச்செய்த வள்ளல் இவரே.

ஆறுமுகப்புலவர் திருவாவடுதுறைக்கு வந்ததும் தேசிகர் முகமலர்ந்து, நல்வரவு கூறிப் பண்டாரச் சந்நிதிகளுக்கு அறிமுகப்படுத்தினுர். புலவரின் அறிவாற்றல்களை அறிந்துகொண்டனர். இலக்கண இலக்கியங்களிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும் அவர்கள் கேட்ட ஐயங்களுக்குத் தக்க விடையிறுத்தமை அவர்கள் உள்ளத்தை ஈர்த்தது. புலவர் புலமையை மெச்சினர். உடனேயே சைவசித்தாந்தத்தைப்பற்றிப் பிரசங்கஞ் செய்யுமாறு வேண்டிக்கொண்டனர். சுபநாளில் ஆதீன வித்துவான்களும், பிற புலவர்களும், அன்பர்களும் கூடிய சபையில் நம் புலவர்மணி தேவாரத்தையும், மெய்கண்ட நூல்களையுங்கொண்டு, "பதி, பசு, பாச விளக்கம்" என்ற அரியதோர் சொற்பொழிவாற்றினுர். அவரது தூய செந்தமிழும், எளிய இனிய நடையும், பொருட்செறிவும், உள்ளக் கிளர்ச்சியும், சிவபக்தியும், ஆகம ஞானமும், சைவாவேசமுங் கண்ட சபை அப்படியே வியந்து சித்திரப்

பாவையானது. அப்படிப்பட்ட பிரசங்கத்தை முன் கேட்டதில்லை யென்று ஒவ்வோருள்ளமும் பேசிற்று. நமச்சிவாயதேசிகரும், சிவஞான முனிவரும், கச்சியப்பமுனிவரும் விளங்கிய அந்த ஆதீனம் இச்சொற்பொழிவால் பெருமை பெற்றது. அம்பலவாண தேசிகரும், சுப்பிரமணிய தேசிகரும் வித்துவான்களுடன் கலந்து கொண்டு, நம் புலவர்மணியின் நாவன்மையைப் போற்றி "நாவலர்" என்ற பட்டத்தை யளிதத மையால் இவரது தமிழ், சைவப் புலமையைத் தமிழகம் நன்கறிய முடிந்தது. தமிழகத்தில் எத்தனையோ நாவலர்களிருந்தும் 'நாவலர்' என்றவுடனே நம் ஆறுமுகநாவலரையே குறிப்பதாயிற்று. என்னே அவரது பெருமை!

**'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் றோன்றாமை நன்று'.**

என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்காக வாழ்ந்து காட்டிய பெருந்தகையாளர் நாவலர் அவர்களே.

சைவசமய நூல்களைத் திருத்தமுடன் புதுக்கி வெளியிட்டார். நாவலர் பெருமான் சைவத்தின் பொருளைச் சுருக்கமாக விளக்கி, முதலாம் இரண்டாம் சைவவினாவிடைகளாகச் செய்துதவினார். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றின்மீது அளவுகடந்த பிரீதியுடையவர். இவற்றைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் விளங்கும் வண்ணம் தூய வசனநடையில் ஆக்கித் தந்தார்.

நாவலர் அவர்களுக்குப் பெரியபுராணம் உயிர். இதன் உண்மைகளையும் உட்பொருள்களையும் வசனநடையில் விளக்கியதனேடும் அமையாது சூசனமாகவுஞ் செய்து புராணத்தின் மேன்மையை யுணர்த்தியுள்ளார். அச்சூசனத்தைக் கற்றால் பெரியபுராணத்தின்மீது நாவலர் அவர்களுக்கு எவ்வளவு பிரீதி யிருந்த தென்பதனை அறியலாகும்.

சைவத்தின்வழி நின்றவரே சிவானுக்கிரகத்தால் பரமுத்தி பெறுவர் என்பதும் புறச் சமயத்தில் நிற்பவர் அவ்விடத்திற் செய்த புண்ணிய மிகுதியால் பின் வைதிகமார்க்கத்திலே புகுந்து, வேதாகமங்களின்வழி ஒழுகிப் பரமுத்தி பெறுவர். அவ்வழி தவறியோர் பூமியில் மீண்டும் பிறந்து சிவஞானத்தைப் பொருந்திப் பரமுத்தியாகிய சிவசாயுச்சியத்தை யடைவர். சைவசித்தாந்தத்தாலன்றிப் பரமுத்தி சித்தியாது என்பதும், அச்சிவஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே யென்பதும், வேதத்துள் விதித்த வேள்வி முதலியனவெல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதும் தருக்க முறையில் நாவலரால் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

பெரியபுராணம்பற்றி மேலும அவர் கூறியிருப்பதாவது:- தன்னையுணர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தமிழ் வேதமாகிய தேவாரத்தின் வரலாறும் மகிமையும் ஒரோவிடங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓது

வோர்க்கும் கேட்போர்க்கும் பத்தி வைராக்கிய ஞானங்களைப் பயக்குங் கருவியாய் இருத்தலானும், சிவஞானசித்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சைவசித்தாந்த நூல்களிலும் உரைகளிலும் சிவானுபவத்துக்குத் தான் கூறும் நாயன்மார் பலருடைய சரிததிரங்களில் உதாரணங் காட்டுதலானும், சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத் திருவருடைய சரித்திரங்களையும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை, பூசை, திருவிழாக்கள் செய்தற்கண்ணும் அவைகளைச் சேவித்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும், சைவர்கள் யாவரும் ஒருதலையாகக் கற்றுணரவேண்டிய நூலேயாம் என்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். இவரின் இவ்வரிய முயற்சியால் சைவத்தின் உண்மைகளை யாவரும் அறிந்து அதன்வழி நிற்க இது ஏதுவாயிற்று. இன்னும் அதன் பெருமை சொல்லுந்தரமன்று.

சிவஞானயோகிகளுக்குப் பிறகு இவ்வளவு தெளிவாக, சிவசமயத்தை உலகெல்லாம்அறிந்து பயிலும்படி விளக்கியவர் நாவலரைத் தவிர வேறு யாருமிலர் என்று கூறினுல் மிகையன்று.

அவரது சைவவினுவிடை ஒரு வேதமெனக் கொள்ளலாம். சௌசம் செய்வது, பல்விளக்கு

வது, குளிப்பது, உறங்குவது முதலிய ஒவ்வொரு அநுட்டானத்தையும் தாமே அநுட்டித்து, விரிவாக நாவலர் நமக்கு விளக்கியிருக்கிறார். நூலின் இறுதியில் திருமுறைகளிலிருந்து பாராயணததிற்கு இனிய தோத்திரப் பாடல்களைத் திரட்டித் தந்திருக்கிறார். அவர் தொட்டதெல்லாம் நிறைவே; சொன்னதெல்லாம் திருமறையே. இன்று சைவத்தைப்பற்றி ஏதாவது தெரியுமானால், அது நாவலர் பெருமையினால் என்றே துணிந்து கூறலாம். சைவத்துக்கு மட்டுமா? தமிழுக்குமாக அரிய பெரிய தொண்டுகள் செய்துதவினார். தமிழுக்குக் கண்ணான திருக்குறளை அவரே அழகாகப் பதிப்பித்தார். நாவலர் இன்றேல் பரிமேலழகர் உரையுடன் கூடிய திருக்குறளை நாம் அனைவரும் கண்டிருக்க முடியாமலும் போயிருக்கலாம் திருக்கோவையாரைப் புலவர்மணிகள் மெச்சும்படி அவர் வெளியிட்டார். தேடக்கூடக் கிடைக்காத தொல்காப்பியம் சேனாவரையர் உரையை, ஏட்டுப்பிரதிகள் கொண்டு சோதித்துப் பதிப்பித்துதவினார். நன்னூல் அவராலேதான் திருத்தமாக வெளிவந்து பலருக்கும் உதவியது. நாவலர் பதிப்புக்களெல்லாம் அக்காலப் பதிப்புக்களிற் சிறந்தவை. ஒரு பிழையுமில்லாமல் எழுத்துக்களை அழகாக அடுக்கி நூல் கையடக்கமாயிருக்கும்படி சிக்கனமாக வெளியிட்டார். தமிழுக்கும் சைவசமயத்துக்கும் பிரிக்க முடியாத தொடர்புண்டென்பது நாவலர் அவர்கள் எண்ணமாகும்.

நாவலர் உரைநடைஅரசர். செய்யுள் திறமையும் உடையவர். ஆனால் பழைய பத்திப் பாடல்களே போதுமானவை என்பது அவரது கொள்கையாகும். தமது நூல்களில் கணபதி துணை போடுவார். அவர் பாடிய விநாயகர் வணக்கப் பாவிலும் சமய உண்மையை யடக்கி யுள்ளமை ஈண்டு கவனிக்கற்பாலதாகும்,

சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த அறிவிச்சைத் தொழிலென் றோதும்
மதமபூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

— நாவலர்.

## எதிர்ப்புக்கு எதிர்ப்பு

நாவலர் தம் சமயவிருத்தியில், தமது உயிருக்கு வரும் ஆபத்திற்கும் பயப்படாது நின்றுழைத்தவர். புறச்சமய கண்டனங்களால் இவருடன் அநேகர் பகைமை பாராட்டினர். பாதிரிமாரையும் புறச் சமயங்களையும் கண்டித்ததுடன் சைவசமயத்திற் படிந்த ஊழல்களையும், வேதாகம நெறிக்கு மாறான பழக்க வழக்கங்களையுமெல்லாம் அவர் கண்டித்துத் திருத்தினார். முதன்மையாகக் கோயிலிற் படிந்த குறைகளைப் பச்சைப்படியாகப் பேசினார்; எழுதினார், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப்பற்றி அவர் எழுதிய உணர்ச்சிக் கட்டுரைகள் புகழ்பெற்றவை.

தாம் கண்ட ஊழல்களைப் பொருத்தமான நிகழ்ச்சிகளைக் கொண்டு அசைக்க முடியாத நியாயத்துடன், உண்மையினின்றும் பிறழாத கோவையுடனும் அவர் வர்ணிக்கும்பொழுது, நமது புலவர் சட்டத்தொழில் புரிந்திருந்தால் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பார் என்று தோன்றுகிறது. கோயிலதிகாரிகளுக்கும், கந்தமடப் பிரபுவிற்கும் அவர்கொடுத்த சொற்சவுக்கை நாம் மறந்துவிடமுடியாது.

தாம் பிறந்த நல்லூரில் உள்ள கந்தசுவாமி கோயிலில் அப்போது சிவாகமத்துக்கு மாருன பல காரியங்கள் நடப்பதைக் கண்ட நமது சைவப்பிரசாரகர் மனங் கொதித்தது. அத்தகைய கோவிலில் அவர் நுழைய மறுத்து விட்டார். சிறப்பாக அக்கோயிலையும் பொதுவாக நம் சைவாலயங்களையும்பற்றி அவர் பல சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். சீர்திருத்தமென்ருல் கோயிற் பெருச்சாளிகள் புலிபோலச் சீறுவர். நாவலர் வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் செய்துவந்த பிரசங்கங்களினிடையே நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் சீர்திருத்தங்களைப்பற்றியும் அள்ளி வீசுவார். இது பிற்காலத்தில் ஓரளவு அக்கோயில் சீர்திருந்தி நன்மதிப்பைப் பெற ஏதுவாயிருந்தது. 1929-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம தேதி இக்கோயில் பொதுவென்றும் கோயிலதிகாரி கணக்குக் காட்டவேண்டுமென்றும் தீர்ந்த 10970-ம் இலக்க வழக்கு நாவலர் தொடங்கிய வழக்கின் பேறேயாகும்.

## முடிவுரை

இங்ஙனமாக ஈழநாட்டில் நாவலர் சமயப் பணி செழித்துவளர்ந்தது. இன்னும் பல இடங் களில் சைவபாடசாலைகள் நிறுவினர். 1870-ம் ஆண்டளவில் கோப்பாய் என்னுமிடத்தில் நிறு விய பாடசாலை இன்றும் இவர் பெயராலே நற்பணி புரிந்து வருகின்றது. மற்றும் பல இடங்களிலும் அநேக பாடசாலைகளைத் தொடக்கி அவ்வூரார்வசம் ஒப்புவித்தார். அதன்பின்னரே சைவப்பாடசாலைகள் தொகை பெருகி வளர்ந்து வந்திருக்கின்றது. நாவல ரின் தளராத சமயப்பணி இம்மட்டுடன் நிற்க வில்லை.

வடநாட்டின் கண்ணேயும் வித்தியாசாலை ஸ்தாபிக்க எண்ணி அங்கே சென்றார். சிதம் பரம் சைவர்களுக்கு மூலஸ்தானம். ஆகையால் அவ்விடத்தே ஒரு பெரிய கலாசாலை நிறுவ வேண்டுமென்பதும் அவரது பேரவா. அங்குள் ளோரது உதவியை நாடினார். அவர்களும் ஓர ளவு பொருளுதவினர். யாழ்ப்பாணத்து உதவி யும் கிடைத்தது. அதுகொண்டு அவ்விடத்தே யும் ஓர் பாடசாலை நிறுவிச் சமயப்பணியும், தமிழ் வளர்ச்சியும் செய்வித்தார். இவரது சம யப்பணிக்கு மேன்மேலும் உதவிகள் வந்து கொண்டிருந்தன. தமிழ்நாட்டு ஆதீனங்களெல் லாம் வாழ்த்தும் நன்கொடையும அனுப்பின. பல செல்வரும் பொருளுதவி செய்தனர். நன் மாணுக்கர்கள் பலர் அங்கு கல்விகற்க நான்கு திசைகளிலிருந்தும் வந்து சேர்ந்தனர். இங்கே

கருவி நூல்களும், சமய நூல்களும், திருமுறை நூல்களும் முறையாகப் படிப்பிக்கப்பட்டன. சைவர்களுக்கெல்லாம் இவ்வித்தியாசாலே ஞான பீடமாயிருந்தது. இந்தியாவிலும் இவர் சமயப் பணி வெற்றியீட்டியது.

நாவலர் ஐயா அவர்கள் இவ்வாறு ஈழ நாட்டிலும், இந்தியாவிலும் தமது சலியாத உழைப்பினுல் சைவசமயத்தை விருத்தி செய்தார். இன்னும் தக்க முறையில் கைகொடுத்துதவியிருந்தால் தமிழ்நாடு முழுவதிலும் சைவ மணங் கமழ்ந்திருக்கும்.

அக்காலத்தில் சைவசமயத்துக்கு இடையூறுகள் வந்தபோது நமது சமய குரவர்களாகிய நால்வராலும் சைவசமயமே மெய்ச்சமயமென்று ஸ்தாபிக்கப்பட்டது. அதனுல் சைவம் வளர்ச்சியடைந்து வந்தது. அவர்களின் பின்னர் சைவமுந் தமிழுங் குன்றிய காலத்தில் அவற்றினைக் காத்தவர் நம் ஆறுமுகநாவலர் அவர்களே. இதனுல் இவர் "ஐந்தாங்குரவர்" எனவும் போற்றப்படுகின்றூர். இது சைவசமயத்தவர்களாகிய எங்களுக்குப் பெருமையளிப்பதாகும். நாவலர் காட்டிய வழியில் நின்று சைவத் தமிழ்ப்பணி புரிவோமாக.

**நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்**
**சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — யெல்லவரும்**
**ஏத்துபுரா ணுகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே யறை.**

— சி. வை. தாமோதரம்பிள்ளை

# அநுபந்தம்.

## நாவலரின் கடைசிப் பிரசங்கம்

யாழ்ப்பாணச் சைவப் பிரகாச வித்தியா சாலையில் பிரமாதி வருடம் ஆடி மாசத்திற் (1879) சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசைத் தின மாகிய சுவாதி நட்சத்திரத்தி லன்றேயாம. பிர சங்கம் தொடங்கினதும் முடிந்ததும் சுவாதி நட்சத்திரங்களிலேயாம். அன்று எடுத்துக் கொள்ளப்பட்ட பீடிகை "பொன்னு மெய்ப் பொருளுந் தருவானை" என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரமாம். பிரசங்க முடிவிலே சனங்களை விளிதது, நான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணுது முப்பத்திரண்டு வருட காலம் உங்களுக்குச் சைவசமயத் துண்மைகளைப் போதித்து வந் தேன். எனக்குப்பின் சைவசமயங் குன்றிப் போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிருர்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும்போதே உங் களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும், என்னைப்போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய அநேகர் வருவார்கள். ஆனுல் உங்களுடைய வைவுக ளைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல ஒருவ ரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிர சங்கம். இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங் கம் பண்ணமாட்டேன் என்னுங் கருத்துப் புலப் பட விரித்துக் கூறினுர். அன்றைப் பிரசங்கத்

தைக் கேட்டுக் கண்ணீர்விட்டழாதவர் அங்கே ஒருவருமில்லை. வித்தியாசாலையிலுள்ள தூண்கள் மரங்கள் தாமும் உருகின. இதுவே இவருடைய கடைசிப் பிரசங்கம்.

மற்றைநாள் "சென்ற இரவு ஏன் இந்தப் பிரகாரம் பிரசங்கஞ் செய்தீர்கள்?" என்று அன்பரொருவர் கேட்டபோது, தமக்கு அந்த நேரம் ஒன்றுந் தெரியவில்லை என்றார்.

(த. கை. நாவலர் சரி.)

## நாவலர் நற்செயல்கள்

"உதயபானு' என்னும் பெயரோடு ஒரு சைவப் பத்திரிகை நடத்த முயன்று விளம்பரம் விடுத்திருந்தார். உதயபானு என்னும் பத்திரிகை இவருடைய மாணுக்கர்களாற் சிறிது காலம் நடத்தப்பட்டுவந்து பின் இந்துசாதனமாகப் பரிணமித்தது. சேமநிதிகள் உண்டாக்க வேண்டுமென்று நினைந்து அதற்கு வேண்டிய விதானங்கள் எழுதிவைத்தார். தமிழிலே பரீட்சைகள் செய்து பட்டங்கள் கொடுத்தற்கு வேண்டிய ஏற்பாடுகள் எழுதி வைத்தார். இதுவே யாழ்ப்பாணத்திலுண்டான தமிழ்ச்சங்கத்துக்கு மூலமாயிருந்தது. பொன். இராமநாதர் என்பவரை இலங்கைச் சட்டநிரூபண சபையில் ஒருவராக்குவதற்குப் பலர் விருமபாமல் பிறிற்றோ (Brito) என்பவரை ஏற்படுத்த விரும்பிய காலத்தில், இவர் இராமநாதருக்காகப் பல கூட்டங்கள் கூட்டி மிக முயுற்சிசெய்து அவ

ரையே நியமிக்கும்படி செய்தார். இப்படிப் பொதுநன்மை குறித்துச் செய்தன இன்னும் பலவுள.

பிற்காலத்திலே யாழ்ப்பாணத்தில் உண்டான தமிழ்ச்சங்கம் கிறீஸ்துமத கண்டன சபை சைவபரிபாலனசபை இந்துக்கல்லூரி என்பவைகளுக்கெல்லாம் வித்திட்டு வைத்தவரும் இவரே. தமிழ் விவிலிய புத்தகமொன்றின் அட்டையிலே தாம்செய்ய உத்தேசித்த கருமங்கள் இவையிவை என்று குறித்த இடத்தில், கிறிஸ்துமத கண்டனசபை, சைவபரிபாலன சபை என்னும் இரண்டு பேர்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்துக்கல்லூரிக்கும் இவரே காரணரென்பது அதன் வரலாற்றுப் புத்தகத்தால் அறியக்கிடக்கின்றது.

(த. கை. நாவலர் சரி.)

## உலகம் உய்ய வழி

'சுப்பிரபோதம்' என்னும் நூலின்
இறுதியிற் கூறப்பட்டவை

நமது சைவசமயிகள் ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு, தேவாலயங்களெங்கும் சைவாகமங்களில் விதித்த இலக்கணங்களமைந்த பிராமணர்களைக்கொண்டே பிரதிட்டை பூசை திருவிழா முதலியவற்றை விதிவழுவாது இயற்றுவித்தலும், வாணவிளையாட்டு முதலிய வேடிக்கைகளின் பொருட்டுப் பொருளைச் செலவழித்தலையொழித்து, சிவபத்திமான்களும் பண்ணே

டோத வல்லவர்களுமாகிய ஓதுவார்கள் பலரை நியோகித்துப் பூசாகாலத்தும் உற்சவ காலத்தும் யாவருக்கும் மனங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரியச் சிவன்மேல் அன்பு செனிக்கும்பொருட்டு தேவாரமுந் திருவாசகமுமாகிய தமிழ்வேதத்தை ஓதுவித்தலும, சைவப்பிரசாரகர்களை நியோகித்து வாரந்தோறுங் கடவுளது மகிமையையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பலன்களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் குறித்துச் சனங்களுக்குப் போதிப்பித்தலும் செய்வார்களாயில், அறியாமை நீங்கும்; பாவந் தேயும்; புண்ணியம் வளரும்; சிவபத்தி தழைக்கும்; மாத மும்மழை பெய்யும்; பஞ்சமொழியும்; கொள்ளைநோய் குன்றும; உலகம் உய்யும்.

— நாவலர்

என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங் குழைந்தார்க் கன்றி
என்போன் மணியினை யெய்த வொண்ணுதே.

— திருமந்திரம்.

## சைவன் அவசியம் கற்கவேண்டியன

தற்காலத்திலே சைவர்களாயுள்ளவர்கள் அவசியம் அறியவேண்டிய தமிழ்க் கல்வியும் அநுட்டிக்கவேண்டிய ஆசாரங்களும் கிரியைகளும், இவர் இயற்றிய இரண்டு சைவவினுவிடைகளிலும் சைவதூஷண பரிகாரத்திலும்

சிவாலய தரிசன விதியிலும் நான்காம் பாலபாடத்திலும் குருசிஷ்யக் கிரமத்திலும் மந்திரக்கிரியைகளோடு கூடிய மூன்று நித்திய கரும விதிகளிலும் சிவசிராத்த விதியிலும் காண்டிகையுரையிலும் அடங்கியிருக்கின்றன. இவ்வளவு நூல்களையும் ஒரு சைவன் கற்பானுயின், அது அவனுக்குப் போதும். இந்த நூல்களில் மூன்ரும் நித்திய கருமவிதியும் குருசிஷ்யக் கிரமமும் அச்சில் வரவில்லை.

(த. கை. நாவலர் சரி.)

## நாவலர் விக்கியாபனம்

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன், அந்தச் சமயத்தின்வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது, பயன் பெருன். அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினுலே பெறப்படும பிரயோசனமும், ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படுஞ் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாதபொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

கிறீஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும், வருகிறபடியினாலே, அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கி வருகின்றது.

நம்முடைய சைவசமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது.

ஆதலால், நமது தமிழ்நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும், அவைகளுக்கு வேண்டுங் கருவி நூல்களையும,

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்" எனவும,

"வறியார் இருமை யறியார்"—திருக்கோவையார்

எனவும் அருளிச்செய்தபடி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களைக் கற்பித்தலும், திருக்கோயில்கள் தோறும் சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பித்தலும், மிக மேலாகிய புண்ணியங்களாம்.

எல்லாத் தருமங்களையும் அறிந்து விதிப்படி சிரத்தையுடனே செய்து பயன்பெறுதற்குச் சமயநூ லுணர்ச்சியே ஏதுவாதலால், அப்படிப் பட்ட சமயநூ லுணர்ச்சியை வளர்த்தலாகிய இந்தத் தருமமே எல்லாத் தருமங்களிலும் மிக மேலானது என்பதும், எல்லாத் தருமங்களுக் கும் மூலம் என்பதும், சொல்லவேண்டுமா!

## சிவசொத்து

தமக்குரிமையில்லாத பொருளை நாவலர் மனத்தாலும் தீண்டார். பிறரும் சுயநலத்துடன் அபகரிப் பதைக் கண்டிப்பார். முதன்மை யாக, சிவசொத்தை எவராயினும் துர்விநியோகஞ் செய்தாலும், சுய நலத்திற்காக அபகரித்தாலும், பலமாகச்சண்டைபோட்டு அதைச் சிவார்ப்பணமாக்குவார்.

வேதாகமங்களை ஓதுதலும், அறிவுநூல் களைப் பிறருக்கு விரித்துணர்த்தலும், தருமங் களை எடுத்துப் போதித்தலும், பள்ளிக்கூடங் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது ஞானமிர்தம் என்னும் ஞானநூலில் வகுத்துச் சொல்லப்பட்டது.

வருஷந்தோறும் இந்தத் தருமத்தின் வரவு செலவுக் கணக்கும், இது நடத்தப்படுங் கிரம

மும், பிறவும் விவரமாய் அடங்கிய அறிவிப்பை சபையார்முன் படித்து, பின் அச்சிற் பதிப்பித்து எங்கும் பிரகடனஞ் செய்யவேண்டும்.

இங்கே கற்றுத் தேர்ந்த மாணுக்கர்களை, இந்தச் சபையாருக்கு முன்னே பரீக்ஷைசெய்து, கற்று வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு, அவரவர் தகுதிக்கு ஏற்ற பெயரும் கொடுக்கவேண்டும்.

நான் ஜயவருடம் (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஷ் வித்தியா சாலையிலே இங்கிலீஷ் கற்றேன். பிலவவருடம் (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனுயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை; என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களா யிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலகவருடம் புரட்டாதி மாசம் (1848) பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லியவழியும், நான் அவ் விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலீஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம்

பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத்திரங் கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமே யுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்வேண்டும் என்னும் பேராசையேயாம்.

இப் பேராசையினலே இருபது வருஷ காலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச் சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தை யுடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப்போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

தன்னிம்மைப் பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபதுவருஷ காலம்

சுவசமய விருத்தியின்பொருட்டு முயற்சிசெய்பவன் ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானுயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்திபெருது? நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும் பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்ருர்கள். இதனுல் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலே எனக்குச் சிறிதும் இல்லே. எனக்குச் செய்யப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கண்ணும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின்கண்ணும் ஊக்கங் கிளராவண்ணம் தடைவிளேகின்றதே என்னுங்கவலே எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வ காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லே, என்னே அவமதிக்கவுமில்லே. இஃதென்னேயாச்சரியம்!!! சைவசமய விருத்திப் பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்டபோது, நான் தமிழ்க் கல்வியிலும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்குங்

காலத்தை முன் பயின்ற இங்கிலீஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நமமவர்களாலே நன்கு மதிக்கப்படல் வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங் கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ்செல்வம். இஃதிங்ஙனமாக நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக்கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினுலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையரு முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரிக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

சைவ சாஸ்திரங்களைக் கற்போரும், கற்பிப்போரும், அவர்களுக்கு அன்னவஸ்திர முதலியவை கொடுப்போரும், சைவாகமவுணர்ச்சி

நிலைபெறும் பொருட்டுத் தனராசிகளையும் பூமிகளையுங் கொடுப்போரும் பெறும் பயன், சுப்பிரமணியக் கடவுள் அகத்தியமாமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரம் என்னும் உபாகமத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுவே எல்லாத் தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தம தருமம் என்பது. சாத்திரம் யுத்தி அனுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்து துணிவு. இது ஒருவராலும் மறுக்கப்படமாட்டாது. இது சத்தியமே எனக் கொள்ளினும், இத்தருமத்தை நடாத்துதற்கு நான் யோக்கியனல்லேன் என்னுங் கருத்து அநேகருக்கு உண்டு. அக்கருத்துடையவர்கள் தாங்களே நடத்தக் கடவர்கள்; அது கூடாதவழி யோக்கியராகிய பிறரைக் கொண்டாயினும் நடத்துவிக்கக் கடவர்கள். இத்தருமத்தை நானே நடத்தல் வேண்டும் என்னுங் கருத்து எனக்கு இல்லை. "யாவர் குத்தினும் அரிசியானாற் போதும்" என்றபடி யாவர் நடத்தினும் இத்தருமம் நிறைவேறினாற்போதும் என்பதே என் கருத்து.

## சைவதூஷண பரிகாரம்

### உபோற்காதம்

அநாதிபகவனாகிய பரமசிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயமாம். இச்சமயம் வழங்கும் நமது ஆரிய கண்டத்திலே மிலேச்சர்களாகிய பாதிரிகள் புகுந்து, இச்சைவத்தை

விளக்கும் சிவசாஸ்திரங்களைச் சிறிதும் அறியாமையினாலும் தாங்கள் முன்னே தழுவிக் கொண்ட துர்ச்சமயமாகிய கிறிஸ்து மதத்தின் மேல் வைத்த துரபிமானத்தினாலும், அப்புன் மதத்தைப் பிரசாரித்தலே தங்களுக்கு எளிதிற் பொருள் வரும் வழியாய் இருத்தலாலும், இச் சைவத்தை வாய்மொழியாலும் குருட்டுவழி முதலிய பல புத்தகங்களாலும், அநியாயமாகவே தூஷிக்கின்றார்கள்.

நமது சிவசாஸ்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும் அப்பாதிரிகளது பொய்ந்நூலாகிய விவிலியநூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்கநூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சிலசனங்கள அத்தூஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி, கிறிஸ்து சமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள்.

யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின் மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூஷணங்களாலே ஒருவரும் கெடாது சைவசமயத்தின்வழியே நின்று உய்யும் பொருட்டு, அத்தூஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை, பரமகாருணிகராகிய பரமசிவனது திவ்வியப் பிரசாதத்தினாலேயே, செய்தோம்.

## சிவபுண்ணியம்

நாங்கள் முயலும் இச்சிவபுண்ணியம் அவசியகர்த்தவ்வியமாகிய உலோகோபகாரமாத

லானும், செய்தல் செய்வித்தல் உடன்படல் என்னும் மூன்றும் ஒக்குமாதலானும், நீங்கள் யாவரும் இப்புண்ணியம் சபலமாகும்பொருட்டு, உபகாரகர்களாய் இருத்தல் வேண்டும். நீங்கள் உபகரிக்குமாறு கூறுதும்:—

க. நீங்கள் எல்லாரும், தினந்தோறும், சந்தியாவந்தனம் சிவபூசை சிவதரிசனம் முதலியன செய்யும்பொழுதெல்லாம், வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பரமகாருண்ணிய சாகரமாகிய பரமசிவனை, அழலிடைப்பட்ட மெழுகு போல மனங்கசிந்துருக, உரோமஞ் சிலிர்ப்ப, கண்ணீர்சொரிய, அன்பினோடு சிந்தித்துத் துதித்து வணங்கி, கிறீஸ்து மதத்தை நிராகரித்துச் சைவஸ்தாபனம் பண்ணுதலாகிய இச்சிவ புண்ணியம் நிர்விக்கினமாய் நிறைவேறும் பொருட்டு அருள் செய்யுமென்று, பிரார்த்தித்தல் வேண்டும்.

உ. இச்சிவபுண்ணியஞ் செய்தற்குச் செல்வப்பொருளும் இன்றியமையாக் கருவியாய் இருத்தலால், நீங்கள் எல்லாரும் சிறிதாயினும் உலோபமின்றி, உங்களுங்களாலியலும் பொருளுதவி காலந்தோறும் செய்தல் வேண்டும்.

ங. அப்பொருள்கொண்டு நாங்கள் அச்சிற் பதிப்பிக்கும் புத்தகங்களை நீங்களெல்லாம் வாங்கி, சித்தசமாதானத்துடனே பலமுறை வாசித்துணர்தல் வேண்டும்.

ச. நீங்கள் வாசித்தவற்றைப் பிறருந் தெள்ளிதின் அறியும்படி உணர்த்தி, நமது சம

யிகள் கிறிஸ்துசமயப் படுகுழியில் வீழாதொழி யும்படி, சிவதானமாகக் காத்துக்கொள்ளல் வேண்டும்.

ரு. பாதிரிகளாயினும் அவர்களைச் சேவிக் கும் பரிசனங்களாயினும் சைவ தூஷணஞ் செய்து கிறிஸ்துமதத்தைச் சாதிக்க வந்தால் அவர்களைப் பிரீதிப்படுத்தல் வேண்டுமென்னுங் கருத்துச் சிறிதுமின்றி, எதிர்த்துநின்று, சைவத் தின்மேல் அவர்கள் ஏற்றுந் தூஷணங்களைப் பரிகரித்து, அவர்களுடைய மததைக் கண் டித்து, அவர்கள் வாயை அடக்கிவிடல் வேண்டும்.

சு. நீங்களெல்லாரும் உங்களுங்கள் பிள் ளைகளை, பரசமயிகளோடு பரிசயம்பண்ண விடாமல், தகுந்த பருவத்திலே சிவதீக்ஷைபெறு வித்து, அவரவர் பக்குவத்துக்கு ஏற்ப, சைவ நூல்களை, தகுந்த ஆசிரியரைக்கொண்டு ஐயந் திரிபறக் கற்பித்துச் சைவாசாரங்களை அநுஷ் டிப்பித்தல் வேண்டும்.

எ. நிகண்டு இலக்கணம் தருக்கம் முதலிய கருவிநூல்களிலும் திருவள்ளுவர் குறள் முத லிய நீதிநூல்களிலும் வல்லவர்களாய், பாவங் களை வெறுத்துப் புண்ணியங்களையே செய்ப வர்களாய், சிவதீக்ஷை பெற்றவர்களாய், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, பெரியபுராணம என்னும் அருட் பாவைந்தையும் அத்தியயனம் பண்ணினவர்க ளாய், நான்கு பாதத்தையும் பிரதிபாதிக்கும் ஒரு தந்திரத்தையாயினும் முற்றக் கற்றவர்க

ளாய், திராவிட சித்தாந்தம் பதினன்கையும் உணர்ந்தவர்களாய், குருலிங்க சங்கமபத்தி விசிஷ்டர்களாய் இருக்கும் புருஷர்களைத் தெரிந்து, சைவப் பிரசாரகர்களாக நியோகித்து, ஊர்தோறும் தேவாலயம், மடம் முதலிய பரிசுத்த ஸ்தானங்களிலே சர்வசனோபகாரமாக வாரந்தோறும் சைவப் பிரசாரம் செய்வித்தல் வேண்டும்.

இவ் வெழுவகையாலும் நீங்கள் எல்லாரும் இந்நன் முயற்சிக்கு உபகாரர்களாய் இருப்பீர்களாகில், நமது தமிழ்நாடெங்கும் புறச்சமயமாகிய இருள் கெடச் சைவ சமயமாகிய பேரொளி தழைத்தினிதோங்கும்; ஓங்கில், அநேகர் பிறந் திறந் துழலும் பசுக்களாகிய பிறரைப் பொருளென மதியாது, பரமபதியாகிய சிவனது மகிமையை உணர்ந்து, அவரே பரம்பொருளெனத் துணிந்து, அவரையே மெய்யன்பினோடு விதிப்படி வழிபட்டு, நித்தியானந்த முத்தியை அடைவார்கள். இங்ஙனம அநேகர் முத்திபெற்றுய்தற்கு ஏதுவாய் இருத்தலால், இச் சிவபுண்ணியமே எல்லாப் புண்ணியங்களிலும் சிறந்தது. நமக்கெல்லாம் இறக்கும்பொழுது துணையாய் உடன் வருவது இச் சிவபுண்ணியமே ஆதலாலும், நமது தேகம் இக்கணம் இருக்கும் இக்கணம் நீங்கும் என அறிதல் கூடாமையானும், நாம் அனைவரும் சிறிதும் தாழ்க்காமல், நமக்கு எக்காலத்தும் உற்ற உறவாகிய சிவனது திருவருளையே முன்னிட்டுக்கொண்டு, இவ் வருமருந் தன்ன பெரும் புண்ணியத்தை விரைவிலே முயன்று நடத்தக்கடவோம்.

நீர்க்குமிழிபோல் நிலையில்லாததாகிய இந்தச் சரீரத்துக்கு ஓர் தீது வருமெனினும், வருக; நிலையுள்ளதாகிய ஆன்மலாபத்தின்பொருட்டு, பிராணத்தியாகம் பண்ணியும், சைவ ஸ்தாபனம் பண்ணுதலே அத்தியாவசியகம. நாம் காத்தல்வேண்டுமென அவாவும் இச்சரீரத்தை நாம் பெற்றது முத்தி பெறும்பொருட்டன்றே? சிவதூஷணம் முதலிய அதிபாதகங்களைப் பரிகரித்தற்பொருட்டுச் சரீரத்தை விடுத்தவர் முத்தி பெறுதல் சத்தியமென்பது சிவசாத்திரங்களாலே சாதிக்கப்பட்டதன்றே? அங்ஙனமாதலின், நாம் சிவதூஷணம் முதலியவற்றைப் பரிகரிக்குங்கால் ஒரோவழி வரற்பாலதாகிய சரீரநாசத்தை ஏற்றுக்கோடலினலே முத்தி பெறுவேமென்பது சத்தியமாமே. ஆமெனில், முத்தியாகிய சாத்தியம சித்தித்தவழி

இச்சரீரமாகிய சாதனம்
இருந்தென்! ஒழிந்தென்!

— சைவதூஷண பரிகாரம்.

## யாழ்ப்பாணச் சமய நிலை

சைவ சமயிகளே! பாதிரிமார்களும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களுஞ் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேளாதொழியுங்கள். உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி யழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்கள் படித்தற்கு அனுப்பாதொழியுங்கள். ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக்கொண்டு அவை

களை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப் பள்ளிக்கூடங்களிலேயே அனுப்பி லௌகிக நூல்களையும் நீதி நூல்களையும சைவசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதாரணக்கல்வி விசாரணைத் தலைமைத்துறைக்கு விண்ணப்ப மெழுதிக் கவர்ன்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று, லௌகிகநூற்கல்வியை விருத்தி செய்யுங்கள். அதற்கு எவராவது இடையூறு செய்யின், நீங்களெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்ப மெழுதிக் கொள்ளுங்கள். அவர்கள் பராமுகமா யிருப்பின், இங்கிலாந்துக் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்ப மெழுதிக்கொள்ளுங்கள்.

---

## சட்டசபையில் நாவலரைப்பற்றிய புகழுரைகள்

நாவலர் அவர்கள் தொண்டுகளின் சிறப்புக் களைப்பற்றி இலங்கைச் சட்ட சபையிலே 19-10-1876 ல் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களும், 11-2-1884 ல் சேர். பொன். இராமநாதன் அவர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

---

## விபுலானந்தரின் வாழ்த்து

மன்னுமீ ழத்தை யடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசை தருமையம் பதியிற்
றெரிகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே ழிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவர்தாள் தொழுதார்
இன்றமிழ் வளர்த்தநா வலனார்.

முற்றும்.

யாழ்ப்பாணம்
சைவப் பிரகாச அச்சியந்திரசாலை
வண்ணார்பண்ணை. J. 175—62.

முதற் பதிப்பு 19-11-62.] [விலை ரூபா 1-00